தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

திங்கட்கிழமை, 1977 ஜூலை 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. விதி 82-ன்படி விளக்க உரை
காவிரி நீர் வழங்குவதுபற்றி கருநாடக முதலமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நானும் நேற்று பெங்களூர் சென்று, கருநாடக முதலமைச்சருடன் காவிரி நீர் வழங்குவதுபற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்தினோம். இப்பேச்சு வார்த்தைகள் சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் நடந்துள்ளன என்பதை மேலவை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறுவைப் பயிர் சாகுபடிக்காக, கூடுமானவரை எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு தண்ணீர் கொடுத்துதவுவதாக கருநாடக முதலமைச்சர் கூறியுள்ளார். இதனையொட்டி, ஜூலை மாதம் 15-ம் தேதி முதல் மேட்டூர் அணையிலிருந்து சம்பந்தப்பட்ட எல்லா நஞ்சை நிலங்களுக்கும் தண்ணீர் திறந்து விடப்படும். நெருக்கடியான இந்நேரத்தில், கருநாடக அரசினர் தாராள மனப்பான்மையுடன் முன்வந்து ஒத்துழைப்பு நல்கியதற்கு அரசின் சார்பிலும், உங்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1977 ஜுலை 11

பருவ நிலையை அனுசரித்து மேலும் தண்ணீர் விடுவது சம்பந்தமாக கருநாடக முதலமைச்சரை இம்மாத இறுதியில் மீண்டும் நமது முதலமைச்சரவர்கள் சந்தித்துப் பேச இருக்கிறார்கள்.

கைம்மாறாக, தமிழக அரசு, கருநாடக அரசின் வேண்டுகோளை ஏற்று, அம்மாநிலத்திற்கு மின்சார உதவியளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. இது சம்பந்தமாக, விரைவில் கருநாடக மின்துறை அமைச்சர் சென்னை வந்து என்னுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த இருக்கிறார்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, இன்றைய 'தினமணி' பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். ஒரு கோடி கன அடி தண்ணீர் கருநாடக அரசு வழங்குவதாக அந்தச் செய்தியிலிருந்து தெரிகிறது. அமைச்சர் அவர்கள், நாம் எவ்வளவு தண்ணீர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம், அவர்கள் எவ்வளவு தண்ணீர் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைக் கூறவில்லை. ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் வசதிக்கேற்ப எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நமக்கு எவ்வளவு தேவையோ அதைக் கொடுப்பார்களா என்ற சந்தேகம் அவர்கள் சொல்லியதிலிருந்து ஏற்படுகிறது. ஜுலை 15-ம் தேதி தண்ணீர் திறக்க ஆரம்பித்தால், குறுவை சாகுபடி ஆரம்பித்து ஏறக்குறைய ஐந்து மாதத்திற்கு குறுவைக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டிய சூழ்நிலை வரும். சென்ற ஆண்டும் இதே போலத்தான் பத்திரிகைச் செய்தி வந்தது. அரை கோடி அரை கோடியாக இரண்டு கோடி கன அடி தண்ணீர் கொடுப்பதாகச் செய்தி வந்தது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அமைச்சர் தந்துள்ள அறிக்கையின் மீது ஏதேனும் விளக்கம்தான் கேட்கலாம். விரிவான பேச்சு கூடாது.

திரு. கோ. சி. மணி: எவ்வளவு தண்ணீர் தேவையோ அதை அவர்கள் கொடுப்பார்களா என்ற சந்தேகத்தால் கேட்கிறேன். ஐந்து மாதத்திற்கும் போதுமானதாக அவர்கள் கொடுக்கும் தண்ணீர் இருக்குமா என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்து வந்துள்ள நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும்

1977 ஜூலை 11] *[திரு. ஜி. சுவாமிநாதன்]*

என்னுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் இது மாதிரியான ஒரு ஏற்பாட்டினைச் செய்ய முடியுமா என்ற சந்தேகம் எனக்கும் நண்பர்களுக்கும் இருந்து வந்தது. குறிப்பாக ஒரு விளக்கம் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன். ஜூலை 15-ம் தேதி குறுவைக்குத் தண்ணீர் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு இதுமாதிரி ஒரு உடன்பாடு ஏற்பட்டு, 5 டி.எம்.சி., இரண்டு தடவை கொடுத்திருக்கிறார்கள். அது போதுமானதாக இல்லை. குறுவை சாகுபடி செய்து அது காயக்கூடிய நிலைமை முன்பு ஏற்பட்டது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்பட்டது. அதுமாதிரி இல்லாமல் அக்டோபர் பருவக் காற்று ஆரம்பமாகும் வரையில் தொடர்ந்து தண்ணீர் கிடைக்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா? அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

*திரு. எம். சங்கரலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தந்திருக்கும் அறிக்கையில் இப்போது முதலமைச்சர் அவர்கள் சென்று பேசியதில் ஓரளவுக்கு நமக்குத் தேவையான அளவு தண்ணீர் தருவதாகவும் அதற்குப் பதிலாக நாம் மின்சாரம் கொடுக்க ஒப்புக்கொண்டு வந்திருப்பதாகவும் சொன்னார்கள். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி இப்போது நமக்குத் தண்ணீர் விடப்படுகிறதா? புதிய முறையில் இப்போது உடன்பாடு ஏற்பட்டதன் மூலமாக, அவ்வப்போது ஏற்படுகிற நிலைமைக்கு ஏற்ப, அவர்களுக்கு மின்சாரத்தை நாம் கொடுத்துத் தண்ணீரைப் பெற்றுக்கொள்வது என்ற நிலை ஏற்படுமா? அப்படி வருமானால், முன்பு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகள் தானாகவே செயலற்றது மாதிரி ஆகாதா? அந்த முன்னைய ஒப்பந்தம் வற்புறுத்தப்பட்டதா? அந்த அடிப்படையில்தான் இப்போது தண்ணீர் கொடுக்கப்படுகிறதா? நாமே மின்சாரப் பற்றுக்குறையினால் கேரளாவிலிருந்து பெறவேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படி இருக்கும்போது, எந்த அளவுக்கு நாம் மின்சாரத்தைக் கொடுத்து தண்ணீரைப் பெற்றுக்கொள்வது என்பதைப்பற்றி யோசிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு போல இல்லாமல் குறுவை சாகுபடியை பாதிக்காத அளவுக்கு தண்ணீர் வருவதற்கான உத்தரவாதத்தைப் பெற்று வந்திருக்கிறோம். அதனால்தான் ஜூலை 15-ம் தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதற்கான

முடிவெடுத்திருக்கிறோம். குறுவையைப் பாதிக்காத வகையில் தொடர்ந்து தண்ணீர் கிடைக்குமென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாம் மின்சாரத்தைக் கொடுத்து அதற்குப் பதிலாக தண்ணீர் வாங்குவது போல இருப்பதாகச் சொன்னார்கள். 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது நடைபெற்றதா என்றும் கேட்டார்கள். நாங்கள் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தையோ, அதையொட்டி நீண்டகால ஒப்பந்தத்தைப் பற்றியோ வற்புறுத்தவில்லை. நமக்குத் தண்ணீர்ப் பஞ்சம். அவர்களுக்கு மின்சாரப் பஞ்சம். நம்முடைய குறையை அவர்கள் எவ்வளவு தீர்க்க முடியும் என்பதைப்பற்றிப் பேசி, நாம் எவ்வளவு உதவ முடியும் என்பதையும் பார்த்துச் செய்து கொண்டு வந்த ஏற்பாடுதான் இது. ஒப்பந்தத்தைப்பற்றி எதுவும் பேசப்படவில்லை.

திரு. கோ. சி. மணி: ஒப்பந்தப்படி இல்லையென்றால், நமக்குத் தண்ணீர் தேவைப்படும்போதெல்லாம் அவ்வப்போது சென்று அவர்களுடன் பேசலாம் என்ற கருத்தில் அரசு இருக்கிறதா? ஒப்பந்தப்படி அதைக் கேட்டு நிரந்தரமான முடிவுக்கு வரவேண்டுமென்று அரசு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது குறித்து நிரந்தரமான முடிவுக்கு வர வேண்டுமென்றுதான் இந்த அரசு நம்பிக்கையோடும் முடிவோடும் இருக்கிறது. ஆனால் இதற்கு முன்னால் இருந்தவர்கள் ஏற்படுத்தி விட்டிருக்கிற தடைகளைப் பார்க்கும் போது, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

திரு. கோ. சி. மணி: அமைச்சர் அவர்கள் அந்தத் தடைகள் என்னென்ன என்று விளக்குவார்களா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இதில் விரிவான விவாதம் கூடாது.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்: அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே 82-வது விதியின் கீழ் அந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள். 82-வது விதியின்படி அந்த அறிக்கையின்மீது உறுப்பினர்கள் எந்தவிதமான கேள்வியும் கேட்கக்கூடாது என்றிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விவாதம்தான் இருக்கக் கூடாது என்று இருக்கிறது. பிரச்சினையின் அவசரம் அவசியத்தை முன்னிட்டு ஒன்றிரண்டு விளக்கங்களை கேட்கவும், அவற்றை தலைவர் அனுமதிக்கவும் உரிமை இருக்கிறது.

THE HON. THIRU S. ARANGANAYAGAM: Sir, no question shall be asked.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நாட்டு மக்கள் இந்தப் பிரச்சினையில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை முன்னிட்டு சில விளக்கங்களை அனுமதித்ததில் தவறில்லை.

THIRU G. SWAMINATHAN: For the clarification of the Hon. Minister, may I say that it has been accepted in this House as a matter of convention?

2. அறிவிப்பு.

அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம். ..

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவை விதி 175 (1)-ன்படி அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக கீழ்க்கண்ட உறுப்பினர்களை நியமனம் செய்துள்ளேன்:—

1. திரு. எம். சங்கரலிங்கம்
2. திரு. இரா. சாம்பசிவம்
3. திரு. எல். பலராமன்
4. திரு. ஜார்ஜ் கோமகன்
5. திரு. எம். எம். பக்கர்
6. திரு. ஆர். சக்திமோகன்
7. திரு. பி. ஆர். தாமஸ்.

விதி 176 (1)-ன்படி இக்குழுவின் தலைவராக திரு. எம். சங்கரலிங்கம் அவர்களை நியமித்துள்ளேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS